<u>**சுருக்கம்**</u>

நெடுஞ்சாலைத்துறை– தொலைபேசி– நெடுஞ்சாலைத்துறை பெருநகரம் அலகு – சென்னை பெருநகர வளர்ச்சித்திட்டம், கோட்டம் –3 அலுவலகத்திற்கு அரசின் முன் அனுமதி பெறாமல் அகண்ட அலைவரிசை வசதியுடன் கூடிய நேரடி தொலைபேசி இணைப்பு பெறப்பட்ட செயலுக்கு பின்னேற்பு வழங்கியும் இத்தொலைபேசியின் பட்டியல்களை தீர்வு செய்வதற்கு ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எப்.1) துறை

அரசாணை (நிலை) எண்.110 நாள் 09.07.2013

ஆனி, 25, திருவள்ளுவராண்டு 2044

படிக்கவும்:-

தலைமைப் பொறியாளர், (பெருநகரம்), நெடுஞ்சாலைத்துறை, அவர்களின் கடித எண். 1214/12/அ1, நாள் 29.05.2012, 28.11.2012 மற்றும் 25.04.2013.

******

<u>**ஆணை**</u>

அரசாணை (நிலை) எண்.26, நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள் துறை, நாள் 22–01–2008–இல் கண்காணிப்பு பொறியாளர் (நெ), தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் –III வட்டம், சென்னை அவர்களின் பணியிடம் தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம் பணியிடமாக 31.01.2008–ல் உயர்வு செய்யப்பட்டு, தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம் அலுவலகம் ஆலந்தூரில் இயங்கி வருகிறது.

2. பெருநகரம் அலகில் இயங்கி வந்த தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III கோட்டம் – I அலுவலகம், அரசாணை (நிலை) எண்.89, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.3) துறை, நாள் 05–03–2010 –இன்படி சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம், கோட்டம் – .III அலுவலகமாக உருவாக்கி, மறு பணியமர்வு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து அரசாணை எண்.293, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.3) துறை, நாள் 12–10–2010–ன்படி 24 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் கோட்டம் – 3 அலுவலகம் தொடர்ந்து இயங்கி வருகிறது.

3. தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம் அவர்கள் தமது கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (நெ) பெருநகரம், சென்னை அலகில் 4 கோட்டங்கள், 10 உட்கோட்டங்கள் மற்றும் 20 பிரிவு அலுவலகங்களும் அடங்கும். மேற்படி 4 கோட்டங்களில் 2 கோட்டங்கள் மாநில நிதியின் கீழ் நடைபெறும் வேலைகளையும் மீதம் 2 கோட்டங்கள் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம் – 3 உலகவங்கி நிதி உதவியுடன் நடைபெறும் வேலைகளையும் செயலாக்கம்

செய்யப்பட்டு வந்துள்ளது என்றும், உலக வங்கி நிதியின் உதவியுடன் செயலாக்கம் செய்யப்பட்ட பணிகளை கவனித்த 2 கோட்டங்கள் மற்றும் தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம், சென்னை அலுவலகம் ஆகியவற்றின் பணியிடப் பணியாளர்களுக்கு Grant Fund –III–ல் சம்பளமும் அலுவலக மேற்பார்வைச் செலவினம் மற்றும் அலுவலக செலவினங்கள் யாவும் Grant Fund-III–ல் அரசு ஆணை (நிலை)எண்.102, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.டபிள்யு–2) துறை, நாள் 22–04–2008–ன்படி செலவிடப்பட்டுள்ளது என்றும் மேலும் அலுவலகத்திற்கு, தேவையான தொலைபேசி எண்.22314754, எல்காட் நிறுவனம் மூலம் அகண்ட அலைவரிசை இணைப்பும் (22330014) எண்.044 – 4554002–ம் பெறப்பட்டு, Grant Fund – III –ல் பட்டியல்கள் தீர்வு செய்யப்பட்டு வந்தன என்றும் தெரிவித்துள்ளார்.

**4.** மேலும், நெடுஞ்சாலைத் துறை சீரமைத்தலின் கீழ் அரசால் ஒப்பளிக்கப்பட்ட கோட்டம், இரு உட்கோட்டங்கள் மற்றும் 4 பிரிவு அலுவலகங்கள் அனைத்திற்கும் சேர்த்து ஒரே ஒரு தொலைபேசி இணைப்பு மட்டுமே பெறப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. (பழைய தொலைபேசி எண். 044–22310193 அலுவலகம் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் தொலைபேசி 044–22350133) நெடுஞ்சாலைத் துறை சீரமைத்தலுக்கு முன்னரே இக்கோட்டத்தினால் மாநில நிதியின் (State Fund) கீழான பணிகள் செயலாக்கப்பட்டு வந்தன, என்றும், இக்கோட்டத்தில் மானிய நிதியிலிருந்து தொலைபேசிச் செலவினங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை, என்றும், இக்கோட்டத்தில் இரு உட்கோட்டங்கள் மற்றும் நான்கு பிரிவு அலுவலகங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு தொலைபேசி இணைப்பு மட்டுமே பெறப்பட்டுள்ளதால், இந்த தொலைபேசி இணைப்பு அவசியமான ஒன்றாகும் என தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத்துறை, அவர்கள் தெரிவித்துள்ளார்.

**5.** சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம், கோட்டம்–3, சென்னை அலுவலகத்தில் தற்போது பயன்பாட்டில் உள்ள தொலைபேசி எண். 044–22350133யினை (பழைய தொலைபேசி எண். 044–22310193) அரசுக் கணக்கில் கொண்டுவந்து அதற்கான செலவினத்தை மாநில நிதியில் சம்பள மற்றும் கணக்கு அலுவலகம் (தெற்கு), நந்தனம், சென்னை–35 மூலம் பட்டியல்கள் தீர்வு செய்ய ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத் துறை அவர்கள் அரசை கோரியுள்ளார்.

**6.** மேலே பத்தி 5ல் உள்ள தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் செயற்குறிப்பினை பரிசீலனைக்குப் பின் ஏற்று மேற்காணும் அலுவலகத்திற்கு தொலைபேசி எண் 044/22350133 (பழைய எண். 044–22310193) இணைப்பு பெறப்பட்டமைக்கு பின்னேற்பு ஆணை வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும் இனிவரும் காலங்களில், தொலைபேசி இணைப்பு பெறும் நேர்வில் அரசின் விழிகாட்டி ஆணைகளை பின்பற்றுமாறு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) பெருநகரம், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. மேற்காணும் தொலைபேசிக்கான செலவினத்தை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "3054– சாலைகளும் பாலங்களும் – 80–பொது–001 நெறிபடுத்தலும் நிருவாகமும் –I திட்டத்தில் சேராதது–AZ- தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) 05– அலுவலகச் செலவுகள்–01– தொலைபேசிக் கட்டணங்கள்."
>
> (த.தொ.கு –3054–80–001–AZ–0511)

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 35730/பொ.ப–I/13, நாள் 05.07.2013ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
தலைமைப் பொறியாளர் (பெருநகரம்), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–16.
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை –5.
சம்பள கணக்கு அலுவலர், (தெற்கு), சென்னை–35.

<u>நகல்</u>
பொது(தொலைபேசி) துறை, சென்னை –9.
நிதி(பொ.ப–I) துறை, சென்னை–9.
முதன்மை செயலரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
கோப்பு எண். 7621/எச். எப்1/2012
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்